පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
**பேராதனைப் பல்கலைக்கழகம்**
**UNIVERSITY OF PERADENIYA**

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
**தொடர் தொலைக் கல்வி நிலையம்**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**பொதுக்கலை பட்டப் பரீட்சை (வெளிவாரி- பழைய பாடத்திட்டம்) 2020**
**GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL- OLD SYLLABUS) 2020**
**(Held in November 2021)**
**Geography - 1 புவியியல் -1**
**Physical Geography (GG – 1) பௌதீகப் புவியியல் (GG – 1)**

நேரம் மூன்று (03) மணித்தியாலங்கள்
Time three **(03)** Hours

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்
Marks will be deducted for illegible hand writing

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்களைத் தெரிவுசெய்து மொத்தமாக **நான்கு (04)** வினாக்களுக்கு விடையளிக்க.
Answer **Four (04)** questions selecting two from each section.

இந்த வினாப்பத்திரத்தில் 08 வினாக்கள் உள்ளன
There are 08 questions in the question paper

---

பகுதி 1 - புவிவெளியுருவவியலுடன் தொடர்புபட்ட சமகால பிரச்சினைகள்

(01) (i) புவியின் உட்பகுதியின் பிரதான குணாதிசயங்களை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. (10 புள்ளிகள்)
(ii) கண்ட ஓடு மற்றும் சமுத்திர ஓடு ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை விபரிக்குக. (15 புள்ளிகள்)

(02) (i) மண் உருவாக்கத்திற்கான பிரதான காரணிகளை அறிமுகம் செய்க. (10 புள்ளிகள்)
(ii) இலங்கையில் மண்பாதுகாப்பு நடவடிக்கைகளை பொருத்தமான உதாரணங்களுடன் மதிப்பீடு செய்க. (15 புள்ளிகள்)

(03) கரையோர அரிப்பிற்கான பௌதிக மற்றும் மானிட காரணிகளை நடைமுறை உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. (25 புள்ளிகள்)

(04) பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு (02)** பற்றி சிறு குறிப்புக்கள் எழுதுக.
(i) பனிப்பிரதேச நிலவுருவங்கள் (12.5 புள்ளிகள்)
(ii) பாலைநிலங்களது அரித்தல் நிலவுருவங்கள் (12.5 புள்ளிகள்)
(iii) இலங்கையின் ஆற்று வடிநிலங்கள் மீதான மானிட தாக்கங்கள் (12.5 புள்ளிகள்)
(iv) இலங்கையின் மத்திய மலைநாட்டின் நிலச்சரிவுகள் (12.5 புள்ளிகள்)

**பகுதி II - காலநிலையுடன் தொடர்புபட்ட சமகால பிரச்சினைகள்**

(05) பொருத்தமான வரைபடங்களின் உதவியுடன் வளிமண்டல படைகளின் குணாதிசயங்களை சுருக்கமாக விளக்குவதுடன், புவி மேற்பரப்பு காலநிலையில் மாறன் மண்டலத்தின் பங்கினை விபரிக்குக. (25 புள்ளிகள்)

(06) (i) 'காலநிலை மாற்றத்திற்கான பிரதான காரணிகளில் ஒன்றாக பூகோள வெப்பமடைதல் காணப்படுகின்றது' விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) உயிர்ப்பல்லினத்தன்மை மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக. (15 புள்ளிகள்)

(07) இலங்கையில் பருவப் பெயர்ச்சி மழைவீழ்ச்சியின் பரம்பல் பாங்குகளை பொருத்தமான வரைபடங்களின் உதவியுடன் விபரிக்குக. (25 புள்ளிகள்)

(08) பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு (02)** பற்றி சிறு குறிப்புக்கள் எழுதுக.

(i) கொப்பனின் (Koppen) காலநிலை பாகுபாட்டிற்கு அமைவான அயன காலநிலை (12.5 புள்ளிகள்)

(ii) பசுபிக் சமுத்திரத்தில் எல்-நினோ (12.5 புள்ளிகள்)

(iii) பச்சை வீட்டு விளைவின் இயற்கை செயல்முறை (12.5 புள்ளிகள்)

(iv) இலங்கையில் வெள்ளப்பெருக்கின் தீவிரத்தன்மை (12.5 புள்ளிகள்)

*************************

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
**பேராதனைப் பல்கலைக்கழகம்**
**UNIVERSITY OF PERADENIYA**

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
**தொடர் தொலைக் கல்வி நிலையம்**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

ප්‍රථම ශාස්ත්‍ර පරීක්ෂණය (බාහිර) - 2020 ජූනි
**பொதுக் கலைத்தேர்வு பரீட்சை (வெளிவாரி) -2020**
**GENERAL DEGREE EXAMINATION IN ARTS- (EXTERNAL- Old syllabus) – 2020**
**(Held in November 2021)**
**பொருளாதாரப் புவியியல்: (GG II)**

நேரம் மூன்று (03) மணித்தியாலங்கள்
Time three **(03)** Hours

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்
Marks will be deducted for illegible hand writing

Answer **FOUR (04)** questions.
மொத்தமாக **நான்கு** வினாக்களுக்கு விடையளிக்க.

இந்த வினாப்பத்திரத்தில் 08 வினாக்கள் உள்ளன. உலகின் புற உருவப்படங்கள் இரண்டு வழங்கப்பட்டுள்ளன
There are 08 questions in the question paper. Two world outline maps are provided

---

01. (அ) பொருளாதாரப் புவியியலை வரைவிலக்கணப்படுத்துக. (05 புள்ளிகள்)
    (ஆ) பொருளாதாரப் புவியியலின் உள்ளடக்கத்தையும மாறிவரும் தன்மையினையும் விளக்குக. (20 புள்ளிகள்)

02. (அ) அல்பிரெட் வெபரினது (Alfred Weber) இனது கைத்தொழில் இடவமைவுக் கோட்பாட்டினைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)
    (ஆ) நவீன உலகின் உற்பத்திக் கைத்தொழில்களின் இடவமைவை விளங்கிக் கொள்வதில் அதன் பொருத்தப்பாட்டினை விமர்சிக்குக. (15 புள்ளிகள்)

03. (அ) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் பாற்பண்ணைத் தொழிலிற்கு முக்கியத்துவம் பெற்ற மூன்று நாடுகளைக் குறித்துப் பெயரிடுக. (03 புள்ளிகள்)
    (ஆ) பாற்பண்ணைத் தொழிலின் முக்கிய பண்புகளை விவரிக்குக. (10 புள்ளிகள்)
    (இ) பாற்பண்ணைத் தொழிலினை விருத்தியடையச் செய்வதில் இலங்கை என்ன சவால்களை எதிர்நோக்குகின்றது என்பதை விளக்குக. (12 புள்ளிகள்)

04. (அ) வளங்களை வகைப்படுத்தும் தரமான வகைப்பாடு ஒன்றை வழங்குக. (05 புள்ளிகள்)

(ஆ) ஏதாவது ஒரு புதுப்பிக்க முடியாத வளத்தினை உதாரணமாகத் தெரிவு செய்து, சமூகத்திற்கு அதன் முக்கியத்துவத்தினை விளங்கப்படுத்துவதுடன், அதனை விரைவான அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக. (20 புள்ளிகள்)

05. (அ) உலகில் மூன்று கண்டங்களில் உள்ள, ஐந்து நிலக்கரி வயல்களைக் குறித்துப் பெயரிடுக. (05 புள்ளிகள்)

(ஆ) நிலக்கரியின் சமகால நுகர்வுப் பாங்கினையும், பிரதியீட்டுச் சக்தி மூலங்களிற்கு மாறுவதன் முக்கியத்துவத்தினையும் விவரிக்குக. (20 புள்ளிகள்)

06. (அ) நிலைபேண் அபிவிருத்தியை வரைவிலக்கணப்படுத்துக. (05 புள்ளிகள்)

(ஆ) பொருத்தமான உதாரணங்களின் உதவியுடன் நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தில் எவ்வாறு நிலைபேண அபிவிருத்தியினை அடையளாம் என்பதை விளக்குக. (20 புள்ளிகள்)

07. (அ) மனித வளங்கள் என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொண்டதென்ன? (5 புள்ளிகள்)

(ஆ) மனிதவள அபிவிருத்தியில் வெளிநோக்கிய இடப்பெயர்வானது, முக்கிய பங்கு வகிக்கின்றதா? விளக்குக. (10 புள்ளிகள்)

(இ) இலங்கையை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களின் வெளிநோக்கிய இடப்பெயர்வானது அவர்களை அனுப்பும் நாடுகளில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை ஆராய்க. (10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றில் ஏதாவது **இரண்டிற்குச்** சிறு குறிப்பெழுதுக. (25 புள்ளிகள்)

(அ) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கைத்தொழில்மயமாதல் தொடர்பாக அனுபவிக்கும் தடைகள்.

(ஆ) உணவுப்பாதுகாப்பில் பசுமைப்புரட்சியின் நன்மைகள்

(இ) உயர் தொழில் நுட்பக் கைத்தொழில்கள்

(ஈ) அருகிவரும் கரையோர மீன் வளங்களும் இலங்கையில் அதன் தாக்கங்களும்.

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
**UNIVERSITY OF PERADENIYA**

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර-පැරණි නිර්දේශය) 2020
பொதுக்கலை பட்டப் பரீட்சை (வெளிவாரி- பழைய பாடத்திட்டம்) 2020
**GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL- OLD SYLLABUS) 2020**
**(Held in November 2021)**

## Geography / புவியியல்

## Practical Geography (GG 3)- செய்முறைப் புவியியல் (GG 3)

Time four **(04)** Hours
நேரம் நான்கு (04) மணித்தியாலங்கள

Marks will be deducted for illegible hand writing
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும

Answer **FOUR (04)** questions selecting at **least one (01)** question from each part

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து மொத்தமாக **நான்கு** வினாக்களுக்கு விடையளிக்க.

There are 07 questions in the question paper
இந்த வினாப்பத்திரத்தில் 07 வினாக்கள் உள்ளன

ஹொரொவப்பத்தானை ஓரங்குல இடவிளக்கப்படம், விமான ஒளிப்படம், இந்திய-இலங்கை பிரதேச புறவுருவப்படம், இலங்கை மாவட்ட புறவுருவப்படம், வரையும் தாள், ட்ரேஸிங் தாள், வரைபுத்தாள் என்பன வழங்கப்பட்டுள்ளன.
**கணிப்பான்கள் பாவிக்க அனுமதிக்கப்படும். ஆனால் கையடக்க தொலைபேசி கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.**

---

### பகுதி ஒன்று - இடவிளக்கப் படங்கள்

**(1)** i. வழங்கப்பட்டுள்ள ஹொரொவப்பத்தானை ஓரங்குல இடவிளக்கப்படத்தின் வட அகலாங்குகள் **8° 25' 20" - 8° 28' 00" வ மற்றும் கிழக்கு நெட்டாங்குகள் 80°44' 20" - 80°47' 00" கி ஆகிய பகுதிக்குள் அமைந்து காணப்படும் பௌதிக மற்றும் கலாசார அம்சங்களை காட்டுவதற்கு 1:31,680** என்ற அளவுத்திட்டத்தில் படமொன்றினை வரைக. (15 புள்ளிகள்)

ii. நீங்கள் வரைந்த படத்தில் காணப்படும் பௌதிக மற்றும் கலாசார அம்சங்களுக்கிடையிலான தொடர்பினை விளக்குக. (05 புள்ளிகள்)

iii. மேலே குறிப்பிட்ட பகுதிக்குள் காணப்படும் பிரதான வீதிகளின் நீளத்தினை கணிப்பிட்டு அதனை மைலிலும் கிலோ மீட்டரிலும் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(02) i. வழங்கப்பட்டுள்ள ஹொரொவப்பத்தானை ஓரங்குல (1:63,360) இடவிளக்கப்படத்தின் வட அகலாங்குகள் **8°29' 30" - 8°36' 30" வ மற்றும் கிழக்கு நெட்டாங்குகள் 80°43' 00" - 80°51' 45" கி** ஆகிய பகுதிக்குள் அமைந்து காணப்படும் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் குடியிருப்புக்களை காட்டுவதற்கு **1:126,720** என்ற அளவுத்திட்டத்தில் படமொன்றினை வரைக. (15 புள்ளிகள்)

ii. மேலே குறிப்பிட்ட பகுதியில் காணப்படும் போக்குவரத்துப் பாதைகளுக்கும் குடியிருப்புக்களுக்குமிடையிலான தொடர்பினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

iii. மேலே குறிப்பிட்ட பகுதிக்குள் காணப்படும் பிரதான மற்றும் சீறு வீதிகளின் அடர்த்தியினை கணிப்பிடுக. (05 புள்ளிகள்)

## பகுதி இரண்டு - விமான ஒளிப்படங்கள்

(3) i. வழங்கப்பட்டுள்ள விமான ஒளிப்படத்தில் (1:40,000) காணப்படக்கூடிய நெற்பயிர் செய்கையினை காட்டுவதற்கு மேலமைந்த படமொன்றினை வரைக. (15 புள்ளிகள்)

ii. வரைந்த படத்தினடிப்படையில் நெற்பயிர் செய்கையின் பரம்பல் பாங்கினை விவரிக்குக. (10 புள்ளிகள்)

(4) பின்வரும் **இரண்டிற்கு (02)** சிறு குறிப்பெழுதுக. (25 புள்ளிகள்)

I. கரையோர நிலப்பயன்பாட்டு மாற்றங்களை கற்பதில் விமான ஒளிப்படங்களின் பயன்பாடு.

II. விமான ஒளிப்படத்தினை சூழவுள்ள பின்னணித் தகவல்களும் (marginal information) அவற்றின் பயன்பாடுகளும்.

III. ஓரங்குல இடவிளக்கப் படங்களுடன் ஒப்பிடுகையில் விமான ஒளிப்படங்களின் நன்மைகள்.

## பகுதி மூன்று - வானிலைப் படங்களும் புள்ளிவிபர படவரைகலையும்

(5) அட்டவணை ஒன்றில் **(Table 01)** வழங்கப்பட்டுள்ள வானிலைத் தரவுகளையும் இந்திய-இலங்கை பிரதேச வானிலை நிலைய புறவுருவப்படத்தினையும் பயன்படுத்தி,

i. பொருத்தமான நிறங்கள் மற்றும் குறியீடுகளின் உதவியுடன் ஒவ்வொரு வானிலை அவதானிப்பு நிலையத்திலும் நிலவும் வானிலைத் தன்மைகளைக் குறித்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

ii. **2 மில்லி பார் (2mb)** இடைவெளியில் சமவமுக்கக் கோடுகளை வரைக. (10 புள்ளிகள்)

iii. பிரதேசத்தில் அவதானிக்கக்கூடிய நிலவும் வானிலை நிலவரத்தினை விளக்குக. (05 புள்ளிகள்)

**(6)** வழங்கப்பட்டுள்ள அட்டவணை இரண்டில் (Table 02) உள்ள தரவுகளையும் இலங்கையின் மாவட்ட புறவுருவப்படத்தினையும் பயன்படுத்தி,

i. இலங்கையின் மாவட்ட ரீதியான குடித்தொகை அடர்த்தி பாங்கினைக் காட்டுவதற்கு பொருத்தமான புள்ளியியல் படமொன்றினை அமைக்க. (20 புள்ளிகள்)

ii. இலங்கையின் மாவட்ட ரீதியான குடித்தொகை அடர்த்தி தொடர்பில் கருத்து தெரிவிக்க. (05 புள்ளிகள்)

**(7)** பொருத்தமான விளக்கப்படங்களின் உதவியுடன் பின்வருவனவற்றுள் இரண்டினைத் தெரிவு செய்து விளக்குக. (25 புள்ளிகள்)

i. புவியியல் ஆய்வுகளுக்கான தரவு மூலங்கள்
ii. வெளி சார்ந்த தரவுகளும் வெளி சாரா தரவுகளும் (spatial and non-spatial data)
iii. நிகழ்தகவு மாதிரி (Probability sampling)

*******************************

ජේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்விநிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - 2020
பொதுக்கலை பட்டப் பரீட்சை (வெளிவாரி- பழைய பாடத்திட்டம்) 2020
B.A. GENERAL DEGREE EXAMINATION. (EXTERNAL OLD SYLLABUS) - 2020
(Held in November 2021)

**GEOGRAPHY - 4**

புவியியல் - 4

**SOUTH ASIA (GG IV)**

தென்னாசியா (GG IV)

**அறிவுறுத்தல்கள்**

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து **மொத்தமாக நான்கு** வினாக்களுக்கு விடை தருக. **முதலாவது வினா கட்டாயமானது**. இந்த வினாத்தாளில் மொத்தமாக ஏழு வினாக்கள் உள்ளன. தென்னாசியப் புறவுருவப்படம் ஒன்று வழங்கப்படும்.

**நேரம்: மூன்று** மணித்தியாலங்கள்

---

## பகுதி 1

(01) அ) வழங்கப்பட்டுள்ள தென்னாசியப் புறவுருவப்படத்தில் பின்வரும் விடயங்களைக் குறித்துப் பெயரிடுக. (25 புள்ளிகள்)

i. நேபாளம் மற்றும் மாலை தீவுகள் (02 புள்ளிகள்)
ii. கராச்சி, ஸ்ரீ நகர் மற்றும் வாரணாசி (03 புள்ளிகள் )
iii. தாமோதர் பள்ளத்தாக்கு (02 புள்ளிகள்)
iv. மும்பாய் - பூனே கைத்தொழில் வலயம் (02 புள்ளிகள் )
v. மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் (02 புள்ளிகள்)
vi. மகாநதி (02 புள்ளிகள்)
vii. அக்ரா – கொல்கத்தா கூடுகதி வழிப்பாதை (02 புள்ளிகள்)

ஆ. பின்வரும் இடங்களுக்கிடையிலான தரைத்தோற்றத்தின் தன்மைகளை மூன்று குறுக்கு வெட்டு முகங்களினூடாக வரைபடத்தின் தரப்பட்டுள்ள இடைவெளிகளில் அண்ணளவாக வரைக.

i. A – B (3 புள்ளிகள்)
ii. C – D (3 புள்ளிகள் )
iii. E – F (4 புள்ளிகள்)

## பகுதி 11

(02) தெற்காசியாவானது பௌதீக ரீதியாக நான்கு பிரதான உப வலயங்களைக் கொண்டிருக்கின்ற போதிலும், உலகின் தனியான ஒரு நில அலகாக அதனை இனங்காண முடியும். பொருத்தமான விளக்கப்படங்களின் துணையுடன் இதனை விளக்குக. (25 புள்ளிகள்)

(03) “பொதுவாக தெற்காசியப் பிராந்தியத்தின் கிழக்குப் பகுதியானது சூறாவளிகள் மற்றும் வெள்ளங்களினால் பாதிக்கப்படுகின்றது.” மேற்படி கூற்றினைப் புனையா வரைபடத்தின் துணையுடன் பரீட்சிக்குக. (25 புள்ளிகள்)

(04) i. தென்னாசிய வலயத்தின் பிரதான விவசாய நடவடிக்கைகளைக் கலந்துரையாடுக. (15 புள்ளிகள்)

ii. அவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்து, அது தொடர்பான பிரச்சினைகளைப் பரீட்சிக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி 111

(05) "தெற்காசியப் பிராந்தியமானது இனரீதியாக மிகவும் பன்மைத்துவம்மிக்க ஒரு வலயமாகும்." மேற்படி கூற்றினைத் தர்க்க ரீதியாக ஆராய்க. (25 புள்ளிகள்)

(06) தென்னாசிய நாடுகளின் நகராக்க நிலமைகளை விபரித்து நகராக்கம் தொடர்பான மூன்று பிரச்சினைகளைப் பொருத்தமான உதாரணங்களுடன் கலந்துரையாடுக. (25 புள்ளிகள்)

(07) பின்வரும் இரண்டு விடயங்கள் தொடர்பாக விரிவான குறிப்பு வரைக.

i. தென்னாசியாவின் நிலச்சீரழிவு (12.5 புள்ளிகள்)

ii. தென்னாசியாவின் பொருளாதாரம் மீதான உலகளாவிய கோவிட் - 19 பெருந்தொற்றின் தாக்கம் (12.5 புள்ளிகள்)